VISIT…

நகைச்சுவை தொகுப்பு

எழுத்து - *மோகன் கிருட்டிணமூர்த்தி*
maakimo@gmail.com

© காப்புரிமை மோகன் கிருட்டிணமூர்த்தி, 2006. இந்த படைப்பை ஆசிரியரின் அனுமதியின்றி அச்சடிக்கவோ பிரசுரிக்கவோ சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது
© Mohan Krishnamurthy, 2006. Printing and Publishing without author's explicit permission is prohibited by law.

உள்ளடக்கம்

பிரபலங்களுக்கு ஒரு வரி 3
பிரபலங்களுக்கு ஒரு வரி - 2..... 5
கௌண்டமணி செந்தில் ஒரு கலந்துரையாடல்..... 6
அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷுடன் ஒரு கற்பனை பேட்டி..... 8
இங்கிலாந்து பிரதமர் டோனி ப்ளேருடன் ஒரு கற்பனை பேட்டி .. 10
சோவுடன் ஒரு கற்பனை பேட்டி..... 11
கலைஞருடன் ஒரு கற்பனை பேட்டி..... 13
செல்வி ஜெயலலிதாவுடன் ஒரு கற்பனை பேட்டி 15
ராமதாஸுடன் ஒரு கற்பனை பேட்டி 17
கற்பனை கேள்வி பதில்கள் 19
மோகனின் மற்ற படைப்புகள்..... 21
இணைய தளங்கள் 21
மற்ற தமிழ் இணைய தளங்கள் 21

பிரபலங்களுக்கு ஒரு வரி

அஜீத் நீங்கள் மிகச்சிறந்த கார் ரேஸ்காரர் ஆகவேண்டும் என்பது என் விருப்பம்.

விஜய் ரஜினியை காப்பியடிக்காமலும் டப்பாங்குத்து பாட்டு இல்லாமலும் ஒரு படத்திலாவது நீங்கள் நடிக்கவேண்டும் என்பதே என் விருப்பம்.

தனுஷ் ஏன் கண்றாவியாக நடித்து உங்கள் மாமனார் பெயரைக் கெடுக்கிறீர்கள்.

விவேக் சீக்கிரம் போலீஸ் ஸ்டேஷன் சென்று ஒரு புகார் கொடுங்கள். உங்கள் காமெடி காணாமல் போய்விட்டது.

சத்தியராஜ் போதும்.

வடிவேலு நிறுத்திடுப்பா நிறுத்திடு. இது ரொம்ப ஓவர்.

சன் டிவி நிலையத்தாரே தயவு செய்து உங்கள் நிகழ்ச்சி தயாரிப்பாளர்களை மேல் நாடு போகவேண்டாம் என்று சொல்லுங்கள். ஆபாசம் தாங்கவில்லை.

பார்திபன் நீங்க மஞ்சள் பத்திரிக்கை படிக்காமல் நீலப்படங்கள் பார்க்காமல் மூன்று மாதம் இருந்தால் ஒரு நல்ல படம் தயாரிக்கலாம்.

த்ரிஷா கண்ணுக்கு கீழே இருக்கும் தண்(கண்)ணீர் பையை மெட்ரோவில் இணைத்துவிடுங்களேன்!

ஸ்நேகா உங்கள் துரதிர்ஷ்டம் நீங்கள் தனுஷ்டன் நடிக்க வேண்டியதாகிவிட்டது. கவலைப் படாதீங்க நல்ல காலம் பிறக்கும்.

கமல் நீங்கள் வேட்டையாடவும் இல்லை விளையாடவும் இல்லை. இந்த படம்

உங்களுக்கு தேவைதானா?

மாதவன் கமலைப்போல நடிக்காமல் உங்களைப்போல் எப்போது நடிக்கப்போகிறீங்க?

தயாநிதி மாறன் சன் நெட்வர்கைவிட்டு கொஞ்சம் நாட்டையும் வளர்க்க முயற்சி பண்ணால் நல்ல இருக்கும்.

கிரஸி மோகன் யூஎஸ்ல காமெடியை விட காம நெடிதான் அதிகமாக இருக்கு. கொஞ்சம் க்ளாஸ் எடுங்க இவங்களுக்கு!

பிரபலங்களுக்கு ஒரு வரி - 2

திருமாவளவன் - அம்மா உட்டுப்புட்டு வந்த மாதிரி ஐயாவை எப்ப உட்டுடுவீங்கன்ன மொதல்ல சொல்லிட்டீங்கன்னா அம்புட்டு நாளு அவரு நிம்மதியா தூங்குவாரு.

அமீர்கான் - ஆஸ்காருன்னா என்னங்க ஆசைகாட்டிட்டு பொறவு வெறுங்கையா காருல ஏத்தி உடறதா.

மோகன்லால் - அரண்ல அம்புட்டு நல்லா நடிச்சி புட்டு சொந்த குரல்ல பேசாம போயிட்டீங்களே.

முருகதாஸ் - அந்த கோடி போனவுடனே பல கோடி பண்ணிறீங்களாம்ல. எந்துக்கு.

சென்னை அமெரிக்க தூதரகத்திற்கு - அய்யோ நம்ம நடிகர் குண்டு கல்யாணம் சுற்றுலா விசா வாங்க வந்தாருங்கோ. இதைப் போயி அமெரிக்க தூதரகத்தில் குண்டு-ன்னு பத்திரிக்கையில் கலாய்ச்சிட்டாங்களே.

பழ. நெடுமாறன் - சென்னையில் பீர் மட்டமாயிடுத்துன்னு ரண்டு எளவட்டப் பசங்க பேசிகிட்டு இருந்ததை
கேட்டுப்புட்டு சென்னையில் நீர் மட்டம் கொறஞ்சதுக்கு கேரளா தான் காரணம்னு அறிக்கை உட்டுட்டீங்களாமே.

சானியா மிர்ஸா- பேர மாத்துங்கம்மா. உங்களை விளம்பரதாரர்கள் சாணி மாதிரி மிதிக்கறாங்களே.

சோனியா அகர்வால் - பாத்தும்மா கல்யாணத்துக்கு பொறவும் தனுசோடத்தான் நடிக்கனும்னு கட்டாயப் படுத்தப்
போறாரு வூட்டுக்காரரு.

கௌண்டமணி செந்தில் ஒரு கலந்துரையாடல்

டேய் பச்சை மிளகாய் தலையா எங்கடா போயிட்டு வர்றே.

ஓட்டு போட்டுட்டு வந்தண்ணே.

ஏன்டா அந்த கருமத்தை போட்டே.

ஒரு சந்தேகம் அண்ணே.

எதை வேண்ணாலும் கேளு ஆனா கொழந்த எங்கேர்ந்து வந்துதன்னு மட்டும் கேக்காதே.

இல்லை அண்ணே எலெக்ஷன்னா என்ன அண்ணே.

அப்படி வாடி. இந்த ஆல்-இன்-ஆல் அழகுராஜாவோட அறிவைப்பத்தி தெரிஞ்ச ஒரே ஆள் நீதான்டா.

சொல்லுங்கண்ணே.

அது எலெக்ஷன் இல்லை கலெக்ஷன். காசு பண்ற வேலைடா லக்ஷ்மி வெடி வாயா.

அப்ப ஏன்ணே கையில கறுப்பு புள்ளி வெக்கறாங்க.

அப்படி கேளுடா. டேய் எத்தனை பேரை முட்டாள் பண்ணோம்னு ஒரு கணக்கு வேண்டாமா அதுக்கு தான்.

அப்ப 5 வருஷதுக்கு ஒரு தடவை ஆட்சி ஏன்ணே மாறுது.

டேய் நம்ம தமிழ் மக்களுக்கு அறிவே இல்லைடா. ஒரு கட்சியையே 20 வருஷம் ஆட்சி செய்யவுட்டா அவன் சொத்தை சுருட்டி சோர்ந்து போய் ஒரு வேளை நாட்டுக்கு நல்லது பண்ணுவான்டா. ஆனா நம்ம தமிழ் மக்கள் என்ன பண்றாங்க – 5 வருஷதுக்கு ஆட்சி மாத்தி விடறாங்க. அவன் 5 வருஷம் சம்பாதிச்ச காசை 5 வருஷம் செலவு பண்ணிட்டு மறுபடியும் வந்துடறான் கொள்ளை அடிக்க.

அதுக்கு என்ன பண்றது அண்ணே.

அதுக்கு நான் மதுரை வீரனுக்கு கெடா வெட்டி கூழு ஊத்தப் போறேன்.

கெடா வாங்கிட்டீங்களா.

டேய் நாட்டுக்காக சொந்த காசு போட்டு கெடா வாங்கறதுக்கு நான் என்ன உன்னை மாதிரி பேறிக்கா மண்டையனா.

அப்புறம்.

நான் கெடான்னு சொன்னது உன்னைத் தான்டா ஜார்ஜ் புஷ் வாயா.

அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷுடன் ஒரு கற்பனை பேட்டி

வணக்கம்.

வணக்கம்.

அமெரிக்காவை நெருக்கடியில் ஆழ்த்திக் கொண்டிருக்கும் பிரச்சனைகளைப் பத்தி கேட்கனும்.

எங்க நாட்ல பிரச்சனையா.

ஆமா இருக்கு.

சரி கேளுங்க.

இந்த ஈரான் பிரச்சனை....

ஈரான் ஒரு பெரிய நாடு. 100 கோடி மக்கள் தொகை. கஷ்டங்கள் சகஜம் தான்.

ஐயா நான் குறிப்பது இந்தியாவை இல்லை. ஈரான்....

ஓ. வடக்கு ஈரான். அங்கே கம்யூனிசத்தின் கொடுங்கோல் ஆட்சி நடக்கிறது. அதனாலதான்.

ஐயா நான் வட கொரியா பற்றி பேசவில்லை. ஈரான் ஐயா ஈரான்.

நாட்டின் பெயரில் என்ன இருக்கிறது. என்னை எதிர்ப்பவர்கள் எல்லாம் பயங்கரவாதிகள் தான்.

உள்நாட்டு விவகாரம்-உயரும் வரி வேலையில்லாமை விலைவாசி இதை யார் கவனிப்பது.

அநாவசியமாக கேள்வி கேட்டு தொந்திரவு செய்யும் நிருபர்களையும் உலக பயங்கரவாதிகளின் பட்டியலில் சேர்க்கலாம் என்று தீவிரமாக யோசிக்கிறேன்.

ஐயா சாமி ஆளை விடுங்க.

இங்கிலாந்து பிரதமர் டோனி ப்ளேருடன் ஒரு கற்பனை பேட்டி

வணக்கம்.

கொஞ்சம் இருங்க என்று சொல்லிக் கொண்டே ஜார்ஜ் புஷ்ஷுக்கு போன் போடுகிறார்.

இவரு லியோ தமிழ் நிருபர். அவர் பயங்கரவாதி இல்லைன்னு நீங்க சொன்னீங்கன்னா பதில் வணக்கம் போடறேங்க.

. . . .

சரிங்க.

வணக்கம் லியோ.

என்ன ஐயா வணக்கம் சொல்லக் கூட அவருகிட்டே அனுமதி வாங்கறீங்க.

அனுமதி இல்லை. அவருக்கு எல்லாம் தெரியும். நீங்க பேட்டிக்கு வாங்க.

நீங்க ஏன் அநாவசியமா ஈராக் போரில் தலை நுழைத்தீர்கள்.

அநாவசியமா. அது அவசியம். ஜார்ஜ் சொன்னார்.

உங்க நாட்டு சுகாதாரத் துறையில் ஊழல் அதிகமாகிவிட்டதாமே. நீங்க எதுவும் நடவடிக்கை எடுக்கமாட்டீங்களா.

அதை பத்தி அவர் இன்னமும் ஒன்றும் சொல்லவில்லை.

ஐயா இது உங்கள் உள்நாட்டு விவகாரம்.

ஐயா நான் தினமும் எந்த நிறத்தில் டை அணிய வேண்டும் என்பதையே அவரை கேட்டுத்தான் செய்கிறேன்.

நன்றி. நான் இப்ப போகலாமா.

ஒரு நிமிஷம் ஜார்ஜை கேட்டு சொல்கிறேன்.

சோவுடன் ஒரு கற்பனை பேட்டி

வணக்கம்.

லொக் லொக். ம்ஹூம். வணக்கம். சொல்லுங்க.

நீங்க ஜெயலலிதா சப்போர்ட்டா?

அவங்க ஆட்சியிலே இருந்தா அவங்களை சப்போர்ட் பண்ண மாட்டேன்.

நீங்க கலைஞரின் சப்போர்ட்டா?

அவரு ஆட்சி செஞ்சா மாட்டேன்.

ஆட்சியில் இருப்பவர்களை சப்போர்ட் செஞ்சா தானே வசதியா இருக்கும்.

அதில்லை சார். யாரையாவது குறை சொல்லியே பழக்கம் ஆயிடுச்சு.

சரி. பிஜேபியை ஆதரிக்கிறீர்களா?

பிஜேபி? அப்படின்னு ஒரு கட்சி இருக்குது நம்ம நாட்ல?

நீங்க சோனியா முதல்வரா வருவதை ஏற்றுக் கொள்வீர்களா?

கொஞ்சம் இருங்க. எல்லாரும் என்ன சொல்றாங்கன்னு பார்த்திட்டு அதுக்கு ஏதிரா சொல்றேன்.

உங்களுக்குன்னு சொந்த கருத்தே இல்லையா?

இருக்குப்பா. ஆனா நான் சொன்னா யாரும் கேட்க மாட்டாங்க?

அப்ப நீங்க செய்யறதெல்லாம் என்ன வெறும் ஸ்டண்ட்தானா?

ஜெயலலிதா பண்ணா ஸ்டண்ட் இல்லை. கலைஞர் பண்ணா ஸடண்ட் இல்லை. நான் பண்ணா மட்டும் ஸ்ட்ண்டா?

கலைஞருடன் ஒரு கற்பனை பேட்டி

வணக்கம்.

வணக்கம்.

நீங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்ததைப்பற்றி?

அது கடவுளின் விருப்பம்.

ஆனால் நீங்கள் கடவுளை நம்பாதவர் ஆயிற்றே?

ஆம். இதை நான் சொன்னது கடவுள் நம்பிக்கை உள்ளவர்களுக்கு.

ஓ. அப்படியென்றால் உங்கள் கருத்துப்படி?

என் கருத்துப்படி இது அம்மையாரின் தோல்வி.

யார் அம்மையார்?

அவர் பெயரை நான் சொல்ல விரும்பவில்லை?

செல்வி ஜெயலலிதாவா?

ஆம். அந்த அம்மையார் தான்?

ஜெயலலிதா தான் அம்மையாரா?

ஆம்.

யார் அம்மையார்?

ஜெயலலிதா. ஓ. அவர் பெயரை என் வாயாலே சொல்ல வைத்து விட்டீர்களே? இன்னிக்கு ஒரு வேலையும் நடக்காது.

அதனால் என்ன? நீங்கள் பகுத்தறிவு வாதி ஆயிற்றே?

ஆம். அந்த பகுத்தறிவில் தான் சொல்கிறேன். அந்த அம்மையாரின் பெயரை எடுத்தால் எந்த
வேலையும் நடக்காது.

செல்வி ஜெயலலிதாவுடன் ஒரு கற்பனை பேட்டி

வணக்கம்.

வணக்கம்.

நீங்கள் மீண்டும் ஆட்சியை பிடிப்பீர்களா?

இது என்ன பைத்தியக்காரத்தனமான கேள்வி. நான் தான் ஆட்சி செய்கிறேன்.

என்ன? ஆனால் கலைஞர் தானே முதல்வர்?

அவர் முதல்வராக இருந்தால் என்ன. நான் தான் ஆட்சி செய்கிறேன்.

அவர் உங்கள் பெயரை சொல்லக்கூட மாட்டேங்கறார்?

அவருக்கு ஆங்கிலம் தெரியாது.

உங்கள் பெயர் தமிழ்தானே?

இல்லை. ஆங்கிலத்தில் தான் என் பெயர் ஜெயலலிதா.

தமிழிலில்?

புரட்சி தலைவி.

என்ன புரட்சி செய்தீர்கள்?

நான் தலைவியாக இருப்பதே ஒரு புரட்சிதானே?

சரி. நீங்கள் ஏன் கலைஞருடன் மோதுகிறீர்கள்?

அவர் நடத்தும் டிவியின் பெயர் மட்டும் சன் என்று ஆங்கிலத்தில் இருக்கலாமா?

உங்கள் டிவியின் பெயரும் தான் ஜெயா என்று ஆங்கிலத்தில் இருக்கிறது.

இல்லை. ஜெயா என்பது தமிழ் பெயர்.

இப்போது தானே நீங்கள் ஜெயா ஆங்கிலம் என்று சொன்னீர்கள்.

அது என் இஷ்டம். நீங்கள் போகலாம்.

ராமதாஸுடன் ஒரு கற்பனை பேட்டி

வணக்கம்.

வணக்கம்.

காலையில் எங்கு சென்றீர்கள்?

டாய்லெட். சே. கழிப்பறைக்கு.

பிறகு என்ன செய்தீர்கள்.

ஃப்ளஷ் பண்ணேன். அடச்சே. ஃப்ளஷுக்கு என்னப்பா தமிழில். ஆ. சரி. தண்ணீர் ஊற்றினேன்.

சரி. இன்னிக்கு பேப்பர் படிச்சீங்களா?

தினசரி செய்தித்தாள் படித்தேன்.

என்ன சிறப்பு நியூஸ்.

தினசரி ஆட்சியில் குழப்பம் தான்.

என்ன செய்யப்போகிறீர்கள்?

நான் முதன் மந்திரியுடன் போனில் பேசுவேன்.

என்ன? போனிலா? நீங்கள் தொலைபேசியில் தானே பேசவேண்டும்?

ஆமாம்பா. காலைப் போடு.

என்ன மருத்துவரே. கால் மட்டும் ஆங்கில வார்த்தை இல்லையா?

யோவ். நான் உன் காலை கீழே போடச்சொன்னேன்.

மன்னிச்சிடுங்க.

என் கார் ரெடியா இருக்கு. நான் போகுனும்.

இல்லை ஐயா. உங்கள் மகிழ்வுந்து தயாராக இருக்குன்னு சொல்லுங்க.

கற்பனை கேள்வி பதில்கள்

ஒரு நாள் ஆசிரியர் என்னை அழைத்து நம் பத்திரிக்கையில் கேள்வி பதில் பகுதி தொடங்கினால் என்ன என்று கேட்டார். நானும் என்னுடைய வழக்கமான குறும்புடன் ஐயா அதற்கு யாராவது கேள்வி கேட்க வேண்டும். அப்போது தான் நாம் பதில் எழுத முடியும் என்றேன்.

ஏம்ப்பா நீ தான் கற்பனை பேட்டியெல்லாம் எடுக்கிறாயே. கற்பனை கேள்வி பதில் தொடங்கேன் என்றார்.

அவர் சொன்னது நியாயமாக படவே இந்த கேள்வி பதில்.

கேஃ த்ரிஷாவின் இடையளவு என்ன? மன்னார்குடி கலியபெருமாள்.

பஃ மன்னிக்கவும் நீங்கள் தவறான முகவரிக்கு இந்த கேள்வியை அனுப்பிவிட்டீர்கள். சற்று பொரும் குமுதத்தின் முகவரியை தருகிறேன்.

கேஃ சன் டிவி ஃபளாஷ்நியூஸில் சென்னையில் பயங்கரம் என்று படித்து பதறிவிட்டேன். என்னாச்சு?
திருகழுகுன்றம் செந்தில்.

பஃ அதுவா ஒரு சைக்கிளும் ஒரு ரிக்ஷாவும் மோதி கொண்டுவிட்டது. இப்படியெல்லாம் செய்தால் தானே நீங்கள் 2 ரூபாய் கொடுத்து தமிழ் முரசு வாங்கி படிப்பீர்கள்.

கேஃ ஐயா ஒரு ஜோக்?
சென்னை சொக்கலிங்கம்.
பஃ ஏம்ப்பா மெனக்கெட்டு தபால் நிலையம் போய் தபால் அட்டை வாங்கி இந்த மாதிரி கேள்விகளுக்கெல்லாம் காசை வீணடிக்கிறீர். போய் வேலையை பாருமய்யா.

கே: சமீபத்தில் நடந்த எம் எல் ஏ கொலையை பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? சேத்தியாதோப்பு சேகர்.

ப: கொலை என்பது நிஜம். அதைப்பற்றி நினைத்து நான் எழுதினால் அது கற்பனை. என்ன நினைக்கிறார்கள் என்பதை படிக்க வேண்டுமானால் ஜூனியர் விகடன் வாங்கி படியுங்களேன்.

கே: தனுஷின் வீட்டில் ஏதாவது நல்ல செய்தியா?

திருப்பூர் தினகரன்.

ப: யோவ். இந்த மாதிரி விசயத்துக்குதான் விகடன்-ற ஒரு மாபெரும் பழைய பத்திரிக்கை இருக்கே என்னை ஏய்யா தொந்தரவு பண்றே!

மோகனின் மற்ற படைப்புகள்

1. மேற்கே செல்லும் விமானம் – காதல் காவியம்
2. மெல்லக் கொல்வேன்
3. ஞானி – தத்துவ கதை தொகுப்பு
4. கடைசி பேட்டி – மர்மக் கதை

இணைய தளங்கள்

1. http://www.esnips.com/web/leomohan - Tamil ebooks
2. http://tamilradio.etheni.com – Tamil Online Radio
3. http://www.etheni.com
4. http://www.leomohan.net
5. http://Tamilamudhu.blogspot.com
6. http://Leomohan.blogspot.com

மற்ற தமிழ் இணைய தளங்கள்

1. http://www.muthamilmantram.com
2. http://www.tamilmantram.com
3. http://www.unarvukal.com
4. http://www.tamilnadutalk.com
5. http://www.yarl.com/forum3
6. http://www.tamizmanam.com
7. http://www.thenkoodu.com